DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.15/2024**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | |
|---|---|
| Name | : ரெத்தினம் |
| Father/ Husband Name | : சிலம்பன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது ஆலங்குடியில் குடியிருந்து விவசாயி ஆக வேலை செய்து வருகிறேன். வருடம் ஞாபகம் இல்லை. நவம்பர் மாதம் 25-ம் தேதி ஆனந்தா கல்லுாரி பின்புறம் மாலை 05.00-05.30 மணியளவில் என் தங்கை அ.சா.1னின் குழந்தைகளுடன் பேசிக் கொண்டிருந்தபோது களவாணி களவாணி என்று அ.சா.1 சத்தம் போட்டார். நான் வெளியில் வந்து பார்த்தபொழுது ஒருவர் 2 ஆட்டுக்குட்டிகளை பிடித்து இழுத்துக் கொண்டிருந்தார். சத்தம் கேட்டவுடன் அவர் ஆட்டுக்குட்டிகளை விட்டுவிட்டு ஓடிவிட்டார்.

2. அதன்பிறகு பின்னால் சென்ற நபர் 2 ஆட்டுக்குட்டிகளின் காலை பிடித்து துாக்கி தலைகீழாக அடித்துவிட்டார். பிறகு நான் போய் சத்தம் போடவும் அவர்கள் இருவரும் அ.சா.1யை கையால் முதுகில் குத்தினார்கள். அவர்கள் இருவரின் பெயர் எனக்கு தெரியாது. ஆட்டை துாக்கிக் கொண்டு போனவரை என்னால் அடையாளம் காட்ட இயலாது. ஆட்டை தலைகீழாக துாக்கி அடித்தவரை என்னால் அடையாளம் காணமுடியும். அவர்கள் இருவரையும் அருகில் வந்தவர்கள் இழுத்துக் கொண்டு போய்விட்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சம்பவம் நடந்த இடத்திற்கும் அ.சா1னின் வீட்டிற்கும் சுமார் 100 அடி தூரம் இருக்கும். ஆட்டை தூக்கி அடிக்கும் போது நான் பார்த்தேன். சம்பவ இடத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 4,5 பேர் இருந்தார்கள். சுற்றிருந்த வீடுகளில் உள்ளவர்கள் வேடிக்கை பார்த்தார்கள். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகிலுள்ள வீடுகளில் உள்ளவர்கள் நன்கு வசதியானவர்கள் என்றால் தெரியாது.

2.சம்பவ இடத்திற்கு அருகிலுள்ள வீடுகளில் கண்காணிப்பு கேமரா இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. நான் நேரடியாக சம்பவ இடத்தில் சம்பவத்தை விலக்கிவிடவில்லை என்றால் சரிதான். அ.சா.1னிடம் போலீசார் மருத்துவமனையில் வாக்குமூலம் பெறும்போது நான் உடனிருந்தேனா என்றால் இல்லை. எதிரியை அ.சா.1 தான் நீதிமன்றத்திற்கு வந்திருந்த போது அடையாளம் காட்டினார் சம்பவத்தின் போது எதிரியின் முகம் சரியாக தெரியவில்லை.

3. எதிரியின் குடும்ப விவரம், எங்கு வேலை பார்க்கிறார் போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது. அ.சா.1 எனக்கு சகோதரரி என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.